பத்திரிகைசெய்திகள்

பிரம்மா குமாரிகளின் இந்திய சுதந்திர பவளவிழாவிலிருந்து பொன்னான பாரம் நோக்கி… நிகழ்ச்சியின் துவக்க விழா

மதுரை வர்த்தகச் சங்க கலையரங்கத்தில் சுந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவிற்கான பிரம்மா குமாரிகள் துணை மண்டல அளவிலான துவக்கவிழா செவ்வாய்க் கிழமையன்று (04.01.2022) மாலை 5 மணிக்கு நடைபெற்றது. அதில் நமது தமிழக வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் மாண்புமிகு மூர்த்தி அவர்கள் கலந்து கொண்டு இந்திய சுதந்திர பவளவிழாவிலிருந்து

பொன்னான பாரம் நோக்கி...
நிகழ்ச்சியை குத்துவிளக்கேற்றி நமது இந்திய மூவர்ணக் கொடியை அசைத்து  மற்றும் பிரம்மா குமாரிகள் சேவை திட்டஅடையாளச் சின்னத்தை(மேனோகிராம்) திறந்து துவக்கி வைத்தார். முன்னதாக பிரம்மா குமாரி சேவை ஒருங்கிணைப்பாளர் உமா அவர்கள் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த தற்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்திய சுதந்திரத்திற்கு பாடுபட்ட 10 தியாகிகளை கௌரவித்து வரவேற்று வீரவணக்கம் செய்தார். சகோதரி அவர்கள், இன்றைய பாரதத்தை உண்மையான சுந்திரத்தை நோக்கி

கொண்டு செல்ல வழி என்ன என்பதை விளக்கும் கண்காட்சியை திறந்து வைத்து தியான அனுபவத்தை செய்வித்தார். மதுரை வர்த்தக சங்கத் தலைவர் திரு. டாக்டர் என். ஜெகதீசன் அவர்கள் மற்றும் அரிமா இரண்டாம் துணை அளுநர், திரு இராதா கிருஷ்ணன் அவர்களும் பிரம்மா குமாரிகள் 22 வர்க்கங்களுக்கான சேவைத்திட்டத்தை வரவேற்று வாழ்த்துரை வழங்கினார்கள். பிரம்மா குமாரிகள் பண்புக்கல்வி நிகழ்வுகளின் இயக்குனர் முனைவர் பி.கு. பாண்டியமணி அவர்கள்

இத்திட்டத்தின் கீழ் நாம் அனைவரும் ஒன்றிணைந்து தமிழகத்தில் குறைந்த பட்சம் 1 கோடி பேரிடம் இதன்

உறுதிமொழி எடுக்கும் திட்டத்தை செயல்படுத்தினால் நிச்சயம் காந்தி விரும்பிய உண்மையான இராமராஜ்ஜியத்தை மீண்டும் கொண்டுவர முதல் அடியாக அமையும் என்பதை வலியுறுத்தினார். பிரம்மா குமாரிகள் தலைமையிட தமிழ் ஸ்டுடியோவின் தலைவர் பி.கு ஜெயக்குமார் அவர்கள் உண்மையான சுதந்திரத்தை நோக்கி நாம் பயணிக்க செயல்படுத்தவேண்டிய திட்டத்தைக் கூறி உறுதிமொழி எடுக்கவைத்தார். வாடிப்பட்டியைச் சேர்ந்த தியாகி சுந்தரராஜன் அவர்கள், தமது உறையில் உண்மையான சுதந்திர பாரதத்திற்கு, இருப்பவர்களுக்கும் இல்லாதவர்களுக்குமான இடைவெளி

குறைய வேண்டும், நமக்குள் வெறுப்புணர்வு இருக்கக்கூடாது என்ற வினோபாவின் கருத்துக்களைக் வழியுறுத்தினார். சுமார் 150 பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். மதுரை கலா கேந்திர நாட்டியாலயாவின் மாணவிகள் நடன நிகழ்ச்சியின் மூலம் மகிழ்வித்தார்கள்.

கலந்து கொண்ட தியாகிகள்

உசிலம்பட்டி அய்யாதேவர், குஞ்சாம்பட்டி பெ. கருப்பையா, கருகட்டான் பட்டி பரமசிவம், மதுரை பொன்னகரம் பாலு(எ) சுந்திரமகா-ங்கம், டி கிருஷ்ணாபுரம் அழகப்பொருமாள் கோன், சிறுகுடி எம்.. இராமன், பி தொட்டியபட்டி எஸ்.

நாகப்பன் மற்றும் எஸ் சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டு கௌரவிக்கப்பட்டார்கள்.

சுய மறுசீரமைப்பு 5 அம்ச உறுதிமொழிகள் :

1, மகிழ்ச்சியுடன் மனநிறைவாக இருப்பேன் 2, அடிமைத்தனங்களிலிருந்து விலகியிருத்தல் 3, சுயமாற்றத்தின் மூலம் உலகமாற்றம் 4, நன்றியுணர்வுடன் வாழ்தல் 5, தினமும் தியானம் செய்தல்

இணைப்பு :

புகைப்படங்கள்

பத்திரிகைச் செய்தி சுருக்கம்